# ★ ஹமில்டனின் தலைமையை ஏற்க மறுத்து முப்படைத் தளபதிகள் தொடர்ந்து பிடிவாதம்!

(கொழும்பு)

கூட்டுப்படைத் தலைமைத் தளபதி ஹமில்டன் வனசிங்காவிடம் முழுப்பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டதை எதிர்த்து முப்படைத் தளபதிகளும் தமது ராஜினாமா கடிதங்களை பிரதமரிடம் சமர்ப்பித்ததாகவும் ஆனால் அதனை ஏற்க அப்

[4ம் பக்கம் பார்க்க]

விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஐப்பசி 26 இதழ் 274
யாழ்ப்பாணம் புதன்கிழமை 11 — 11 — 1992

## படை அதிகாரிகள் குழு யுத்த விமானம் வாங்க ஆர்ஜன்ரீனா விஜயம்

(கொழும்பு)

இலங்கை விமானப் படை அதிகாரிகள் குழுவொன்று யுத்த விமானக் கொள்முதலுக்காக ஆர்ஜன்ரீனா சென்றுள்ளது.

'பேமா' ரக நவீன குண்டு

4-ம் பக்கம் பார்க்க)

## கப்பல் கொள்வனவு

(கொழும்பு)

கடற்படையினருக்கு பாரிய கப்பலொன்றைக்கொள்வனவு செய்வதற்காக கடற்படை அதிகாரிகள் குழு ஒன்று சீனா செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

[4-ம் பக்கம் பார்க்க]

# மணலாறில் புலிகள் அதிரடி
# 8 இராணுவத்தினர் உயிரிழப்பு!

## நவீன ஆயுதங்களும் மீட்பு!!

(யாழ்ப்பாணம்)

**மணலாறு மாவட்டத்தில் நேற்று முன்தினம் இராணுவக் காவல் அரண் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதல் ஒன்றில் 8 படையினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்துள்ளனர். 9 நவீன ரகத் துப்பாக்கிகள் உட்படப் பல ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.**

நேற்று முன்தினம் மாலை 4-30 மணியளவில் மணலாறு மாவட்டத்திலுள்ள தென்னை மரவடியில் அமைந்திருந்த இராணுவக் காவலரண் ஒன்றின் மீது, விடுதலைப் புலிகள் திடீர் அதிரடித் தாக்குதலை நடத்தினர்.

சுமார் 4 நிமிடங்கள் நடைபெற்ற இத்தாக்குதலில், 8 படையினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களைத் தவிர ஏனையோர் காயங்களுடன் முகா

(4ம் பக்கம் பார்க்க)

## படை முகாம்களுக்கு அமைச்சர் ஜோன் விஜயம்

(யாழ்ப்பாணம்)

மாகாணசபை அமைச்சரும் வெளிவிவகார அமைச்சரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான ஜோன் அமரதுங்கா நேற்று முன்தினம் காங்கேசன்துறை பலாலி, தீவகப் பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களுக்குச் சென்று, பாதுகாப்பு ஏற்பாடுகளையும் இராணுவத்தினரின் நலன்களையும் பார்வையிட்டுள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் ஆயுதங்களைக் கைவிட்டு 120 ஊர்காவற்படை ஓட்டம்

(மன்னார்)

ஊர்காவற்படையிலுள்ளவர்கள் தங்கள் பகுதியில் தாக்குதல் இடம் பெறும்போது, ஆயுதங்களைக் கைவிட்டு ஓடி விடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது

(4ம் பக்கம் பார்க்க)

## யுத்தம் விரைவில் முடிவுக்கு கொண்டுவரப்படவேண்டும்
### அமைச்சர்கள் வற்புறுத்து

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு யுத்தத்தை விரைவில் முடிவிற்கு கொண்டு வரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென அமைச்சர்கள் சிலர் அரசை வற்புறுத்தி வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த யுத்தத்திற்காக ஒவ்வொரு வருடம் 2000 கோடி

(4-ம் பக்கம் பார்க்க)

## அரசுக்கு எதிராக மனித சங்கிலிப் போராட்டம்

(கொழும்பு)

அரசின் கொள்கைகளை எதிர்த்து 13ம் திகதி வெள்ளிக்கிழமை 'மனித சங்கிலி போராட்டத்தை' நடாத்த எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளன.

4ம் பக்கம் பார்க்க)

## வடக்கில் முழு இராணுவத்தையும் ஈடுபடுத்த அரசு திட்டம்

(கொழும்பு)

இலங்கை இராணுவம் முழுவதையும் வடபகுதியில் புலிகளுக்கு எதிரான யுத்த நடவடிக்கையில் ஈடுபடுத்த அரசு தீவிர திட்டங்களை மேற்கொண்டு வருவதாக 'ஐலன்ட்' தெரிவித்துள்ளது.

கிழக்கில் தற்போது வாபஸ் பெறப்பட்டு வரும் இராணுவப் படையணிகள் வடபகுதி நோக்கி நகர்ந்து வருவதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

கிழக்கில் பாதுகாப்பு கடமைகளை கடற்படையினரும், விமானப் படையினரும், விசேட அதிரடிப் படையினரும், பொலிஸாரும் தற்போது பொறுப்பேற்று வருகிறார்கள்.

(4-ம் பக்கம் பார்க்க)

## ஆண்டு 6 அனுமதிப்பரீட்சை பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

1993-ம் ஆண்டிற்கான ஆண்டு 6 அனுமதிப் பரீட்சை காலவரையறையின்றிப் பிற்போடப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

தேசிய பாடசாலைகளில் ஆண்டு 6 வெற்றிடங்கள் ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டியுள்ளதால் இறுதியாக நடை

(4-ம் பக்க பார்க்க)

## தமிழ் இயக்கங்களின் சிறப்புப் படைப் பிரிவு!

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கு எதிராக போரிடும் பொருட்டு தமிழ்இயக்கங்களைக்கொண்ட சிறப்புப் படைப்பிரிவொன்று இலங்கை இராணுவத்தில் அமைக்கப்பட்டு வருகிறது.

ஈ. என். டி. எல். எவ். இயக்கத்தின் இராணுவப்பிரிவுப் பொறுப்பாளர் 'காளிதாஸ்' என்பவரின் தலைமையின் கீழ் இந்தச் சிறப்புப் படையணி உருவாகிவருவதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவில் ஒரிஸாவில் விசேட முகாம்களில் வைக்கப்பட்டுள்ள தமிழ் இயக்கங்களும், தமிழகத்தில் தனிமுகாம்

[4ம் பக்கம் பார்க்க]

வனம் ஓங்க வளம் ஓங்கும்
வளம் ஓங்கத் தனம் ஓங்கும்

### மகனைக் காப்பாற்ற கிணற்றில் இறங்கிய தாய் மகனுடன் பலி

(புலோலி)

கிணற்றுக்குள் விழுந்த மகனைக்காப்பாற்ற கிணற்றுக்குள் இறங்கிய இளம் தாயொருவர் அவரது மகனுடன் மரணமானார்.

இப்பரிதாபசம்பவம் நேற்று முன்தினம் பருத்தித்துறை நாகலிங்கம் முதலியார் வீதி

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### சித்திரம் கைநூல்

சித்திரப்பாடம் பயிலும் சகலரிக்கும் ஏற்ற கைநூல் சித்திரம் (ஆண்டு 11) இன்றே வாங்குங்கள் ஆக்கம்: யசோ (ஆசிரியர்- சித்திரம் வினு விடை) (சி-6961)

### அச்சுக்கோப்பாளர் தேவை

அச்சுக்கோப்பாளர் (கொம்பசிட்டர்) ஒருவர் தேவை. உடனே நேரில்வருக. ஆனந்தா அச்சகம், 26, காங்கேசன் துறைச் சாலை, யாழ்ப்பாணம். [எ-2577]

### மணமகள் தேவை

யாழ்ப்பாண இந்து பெற்ருேர் வெளிநாட்டில் நிரந்தர உத்தியோகம் பார்க்கும் பூராட நட்சத்திரம், பாவம் அற்ற 29 வயதுடைய மகனிற்கு 25 வயதிற்கு மேற்படாத மணமகளை எதிர்பார்க்கின்றனர். திருமணம் இலங்கையில் நடாத்தி அழைத்துச் செல்லலாம். சீதனம் பெண்ணின் பெற்ருேர் விருப்பம். முழுவிபரங்களுடன் விண்ணப்பிக்கவும் தேவையற்ற விண்ணப்பங்கள் திருப்பி அனுப்பப்படும். விளம்பர இல. 6962, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். (சி-6962))

### அனுமதி பரீட்சை (ஆண்டு 6)

பிரபல பாடசாலைகளுக்கான ஆண்டு 6 மாதிரி பிரவேசப் பரீட்சை 12-10-92 வியாழக்கிழமை (நாளை) பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெறும். தோற்ற முடியாதவர்கள் வினுத்தாள்களை அன்றே (விடைகளுடன்) பெற்றுக் கொள்ளலாம். புதிய கல்வி நிலையம் 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [எ-2579]

**வியாபாரம்பெருக விளம்பரம் செய்க**

## இராசி பலன்

**11-11-1992**
**புதன்கிழமை**
**(தமிழுக்கு ஐப்பசி 26)**

பிரதமை பி. ப. 3-38 வரை கார்த்திகைமு. இ. 8-30 வரை அமிர்த சித்தயோகம் இராகு காலம் பகல் 12-06 முதல் 1-36 வரை சுபநேரம் மாலை 4-36 முதல் 6-06 வரை கார்த்திகை விரதம்.

மேடம்: தொழில் ஆதாயம், உயர்ந்த அந்தஸ்து, காரிய சித்தி.

இடபம்: கடன் சுமை, குடும்ப அலைச்சல், அதிக யோசனை.

மிதுனம்; கல்வி மேன்மை. புத்திசாதுரியம், உறவினர் உதவி.

கடகம்: பிரச்னைக்குத்தீர்வு, சமயோசித முடிவு, பணவரவு.

சிங்கம், தொழில் முடக்கம், மனசஞ்சலம். அலைச்சல்.

கன்னி; புதிய கடன்கள். இரகசிய விரோதிகள், தொழில் மந்தம்.

துலாம்: செல்வாக்கு, தந்திரயுக்தி, தெய்வவழிபாடு.

விருச்சிகம்: தொழில்லாபம் தர்மசிந்தனை. சகோதர உதவி

தனுசு: தொழில் போட்டி, எதிர்பாராத துன்பம், கடிதத் தொல்லை.

மகரம்: வாழ்க்கை கஸ்டம் தேவையற்ற பகை, மனச் சுமை.

கும்பம்: செய்தொழில் சிறப்பு, குடும்பமகிழ்ச்சி, புகழ்

மீனம்: குடும்பசபலம், சந்தைபற்றிய கவலை, குழப்பம்:

— ஜோதிடர்

---

பாடசாலைகளுக்கு இடையிலான

## கரபந்தாட்டப் போட்டி

மாணவர்கள் மத்தியில் கரபந்தாட்டத்தை பிரபல்யம் அடையச் செய்யும் முகமாக, யாழ். கரபந்தாட்ட சம்மேளனம் ''செற்றப்'' முறையிலான கரபந்தாட்ட போட்டி ஒன்றினை நடாத்தவுள்ளது. இப் போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் பாடசாலைகள், சம்மேளனச் செயலாளருடன் இம் மாதம் 16-ம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும்.

ஆசிரியர், திரு கே. ஏகாம்பரம்
செங்குந்தா இந்துக்கல்லூரி, (செயலாளர்)
திருநெல்வேலி கிழக்கு. [இ-6965]

---

## தொழில் நுட்பக்கல்லூரி
## யாழ்ப்பாணம்
## கல்வியாண்டு - 1993


எமது கல்லூரியின் 1993-ம் கல்வியாண்டிற்கான பகுதிநேர விரிவுரையாளர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மாதிரி விண்ணப்பப் படிவத்தினையும், பாடவிபரங்களையும் கல்லூரியில் பார்வையிடலாம். விண்ணப்பதாரர்கள் தாமே படிவங்களைத் தயாரித்து அதனை அதிபர், தொழில்நுட்பக்கல்லூரி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு 1992 - 11 - 27 க்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும்.

அதிபர்.

தொழில்நுட்பக் கல்லூரி,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
1992 - 11 - 10. (ஏ-2582)

---

## 45-ம் நாள் நினைவஞ்சலி



**செல்வன் மகாதேவன் பாஸ்கரன்**
(பண்டத்தரிப்பு)

| ஆண்டவன் படைப்பு | அந்நியரின் அழிப்பு |
|---|---|
| 29 - 3 - 1965 | 28 - 9 - 1992 |

அன்பின் இருப்பிடமாய்
பண்பின் பிறப்பிடமாய்
அறிவின் நிறைகுடமாய்
அடக்கத்தின் வடிவமாய்

தாய்க்குத் தலைமகனுய்
தரணியில் வந்துதித்தாய்
உற்ருரை நேசித்தாய்
உறவினரை மகிழ்வித்தாய்

மனத்தின்கண் மாசிலாது
மனச்சாட்சியே தெய்வம் என்றுய்
பற்றற்ற துறவி போல
விருப்பு வெறுப்பு அற்று நின்ருய்

பெற்ற கல்விக்கேற்ப
பேர் புகழோடு விளங்கினுய்
இறுதி மூச்சுவரை
உறுதியோடு உழைத்தாய்

உன் அன்பு முகம் காணமல்
நாம் ஏங்குகிருேம்
மீண்டும் எங்கள் குடும்பத்தில்
ஒளி விளக்கேற்ற வருவாய் ஐயா !

உமது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

தந்தை. தாய், சகோதர, சகோதரிகள்
மருமகள், உறவினர்கள்,

தகவல் கொடுப்பவர்:
பொ. மகாதேவன்
(தந்தை)
சண்டிலிப்பாய் வீதி,
பண்டத்தரிப்பு. (இ 6964)

---

## 20 லட்சம் பேர் எயிட்ஸுக்கு பலியாவர்

(லண்டன்)

ஆசியாப் பகுதியில் சுமார் 20 லட்சம் பேர் எய்ட்ஸ் நோய்க்கு பலியாகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை ஒன்றை அண்மையில் விடுத்துள்ளது. (க)

---

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



**2-ம் லெப்டினன் பவான்**
(சினைப்பர் பவான்)

| வீரஜெனனம்: | வீரமரணம்: |
|---|---|
| 1-2-1967 | 11-11-86 |

பருத்தித்துறையில் சிறிலங்கா இராணுவத்துடனுன நேரடிமோதலில் வீரமரணமடைந்தார்.

க. உலககுருநாதஐயர்
குடும்பத்தினர்.

சந்நிதி கோவில்,
தொண்டமானுறு. (இ-6969)

---

## VACANCY

### FOR A TRAINEE SALES REPRESENTATIVE

We are looking for an energetic Self Motivating young person who wishes to make Marketing his Career. He will be paid an allowance during the training period, and at the end of period he will receive a retainer fee and an attractive Commission on Sales.

**Requirements**

G. C. E A/L with a reasonably good Knowledge of English. Please apply with full bio-data and give the names and addresses of two referees within one week to.

**Taste Line Industries (pvt) Ltd.**
**14, Seenier Lane, Jaffna.**
(A 2576)

---

## கேள்வி அறிவித்தல்

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை அபிவிருத்தி சபையால் வைத்தியசாலைக்கு முன்னுல் நிர்மாணிக்கப்பட்ட இரு கடைகள் (பெரியது, சிறியது) மூன்று ஆண்டுகால வாடகைக்கு விடப்படவுள்ளது (தேனீர் கடை தவிர்க்கப்பட்டுள்ளது) கடைகளை வாடகைக்கு பெற விண்ணப்பிக்க விரும்புபவர்கள் வைத்தியசாலை பணிமனையில் ரூபா 25/-செலுத்தி பெறப்படும் விண்ணப்பப்படிவத்தை பூர்த்திசெய்து மூடி சீல்வைத்து 21-11-1992 நண்பகல் 12 மணிக்கு முன்னர் நேரடியாக வைத்தியசாலை அபிவிருத்திச்சபைத் தலைவரிடம் (மாவட்ட வைத்திய அதிகாரி) கையளிக்கும்படி கேட்கப்படுகின்றது.

செயலாளர்
அபிவிருத்திச் சபை

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை,
புலோலி. (எ-6966)

# போர்க்களத்தில் புலிகளை சந்திக்க மறுத்து படையினர் பெருமளவில் வெளியேற்றம்

## புலிகளின் பலம் அரசுக்கு பெரும் அச்சுறுத்தல்

**'ஐலன்ட்' வார இதழில் (08-11-92) சமின்ரா பேர்டினன்டோ எழுதியுள்ள கட்டுரையின் தமிழாக்கம்**

மாத்தளைப் பொலிஸ் பகுதியுடன் இணைந்த 177 ஊர்காவல் படையினர் தமது கடமைகளைவிட்டு கடந்த மாதம் ஓடித்தப்பினர்.

கொழும்பில் உள்ள அதிகாரிகள் இவ்வூர்காவற்படையினரை கிழக்குப் பிராந்திய இராணுவ பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்த தீர்மானித்த நேரத்தில் இவர்கள் தங்கள் பதவிகளை கைவிட்டு வேறு இடங்களுக்குவேலைதேடி சென்றுள்ளனர்.

50 ஊர் காவற்படையினர் மாத்திரமே கிழக்குப் பகுதியிலும், அதன் சுற்றுப்புறமான வடமத்திய மாகாணத்திலும் கடமைபுரிய சம்மதம் தெரிவித்து பொதுமக்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு ஏற்பாடாகி இருந்தார்கள்.

177 ஊர் காவற்படையினர் தங்கள் கடமைகளை விட்டு விலகியமை இது முதற்சம்பவமல்ல. புலிகளுக்கு எதிரான வடக்கு கிழக்கு பகுதி உச்சக் கட்டமோதலின் போதும் இந்த ஊர்காவற்படையினர் இதனையே செய்துள்ளனர்.

230 ஊர் காவற்படையினர் மாத்தளை பகுதியில் உள்ள பொலிஸ் அதிகாரிகளிடம் சென்றமாதம் கடமைக்கு செல்லும்படி பணிக்கப்பட்டும், சிங்கள, முஸ்லிம் கிராமங்களில் புலிகளின் ஆக்கிரமிப்பை எதிர்க்கும் படியும் அறிவுறுத்தப்பட்டிருந்தனர்.

இத்தருணத்தில் ஊர்காவற்படையினர் பொலிஸ் அதிகாரிகளிடம் சென்று இக்கடமைப்பாட்டுக்கு தங்களை அனுப்பவேண்டாம்என்றனர். என்னும் வேண்டுகோள் நிறைவேற்றப்படாத நிலையில் அவர்கள் தங்களது ஆயுதங்களை ஒப்படைத்த பின்னர் தமது கிராமங்களுக்குச் சென்றுள்ளனர்.

எல்லாமாக 18,000 ஊர்காவற்படையினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவற்றில் 14,000 பேர்கள் வடக்கு-கிழக்கு மாவட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுததப்பட்டுள்ளனர்.

இந் நிலையில் பாதுகாப்பற்ற நிலையில் உள்ள கிராமங்களில் காவலை குறிப்பாக கிழக்கு. வடமத்திய மாகாணங்களில் கூடுதலான ஊர்காவற்படையினரை இம்முயற்சில் ஈடுபடுத்தவேண்டும் என்ற அபிப்பிராயம் நிலவுகின்றது.

ஆனால் விருப்பமற்ற ஒரு சிலரின் நடவடிக்கையால் பிரச்சினை உருவாகியுள்ளது. இவர்கள் யுத்த முனையில் புலிகளை நேருக்கு நேர் சந்திப்பதற்கு அஞ்சுகின்றனர். அண்மையில் 200 முஸ்லிம்களின் கொலைக்கு பின்னரே ஊர்காவற்படையினரை கடமையில் ஈடுபடுத்த வேண்டும் என்ற தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

தற்பொழுது சிங்கள முஸ்லிம் கிராம எல்லைகளில் புலிகளின் தாக்குதல்களை சமாளிப்பதற்கு எந்த விதத்திலும் உதவாத தரக்குறைவான ஊர்காவற்படையினரை உருவாக்கியுள்ள நிலைமையை அதிகாரிகள் தற்போது உணர்ந்துள்ளனர்.

புலிகளின் அச்சுறுத்தலுக்குள்ளான எல்லாக் கிராமங்களும் சிற்றூர்களும் தொண்டர் படைப் பிரிவினாலும் பொலிஸ் பிரிவினாலும் பாதுகாப்பு வழங்கப்பட்டு வந்துள்ளன.

பாலியா கொடலாவும் அதன் சுற்றுப்புறக் கிராமங்களும் அச்சுறுததலுக்கு உள்ளானபோது, மேலதிக பொலிசாரும் இராணுவத்தொண்டர்களும் இவற்றினை தடுத்து நிறுத்ததவறி உள்ளனர்.

ஆய்வாளர்கள் தற்பொழுது அரசினால் உயர்பீடத்தில் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் தரக்குறைவாக பயிற்றப்பட்ட ஊர்காவற்படை, மேலதிக பொலிசாரினால் புலிகளினால் மேற்கொள்ளப்படும் சண்டமாருத யுக்திகளை எவ்விதத்திலும் தடுத்து நிறுத்த முடியாது என்பதை உணர்கின்றனர்.

கடமையினை கைவிட்டு செல்லும் இந்த பயிற்சிபெற்ற படையினரின் நடவடிக்கை தேசியப்பாதுகாப்புக்கு ஓர் அச்சுறுத்தலாகவே அமையும் என கருதப்படுகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் பல நூற்றுக்கணக்கானோர் தமது பதவிகளை விட்டுச் சென்றுள்ளனர்.

மேலும் வடக்கு கிழக்குப் பிராந்திய யுத்த திறமைசாலிகளான டென்சில் கொப்பேக்கடுவ, ஜெனரல் விஜய விமலரத்ன, ஆகியோரின் மறைவுக்குப் பின்னர் படையினரின் மத்தியில் பல பிரச்சினைகளை மேலோங்கச் செய்துள்ளது.

கடந்த ஆகஸ்ட் மாதம் இறந்த மூன்று திறமைமிக்க கேணல்களின் மறைவைத்தொடர்ந்து 840 இராணுவத்தினர் கடமைக்கு 'கல்தா' செய்துள்ளனர். இவற்றில் அநேகமானோர் தரைப்படையில் உண்மையாகப் போர் புரிபவர்கள்.

அதற்கடுத்தமாதம்(செப்டம்பர்) 50% இராணுவத்தினர் மேலும் தமது பதவிக்கு முற்றுப்புள்ளி வைத்தனர். மேலும் அதிகமானோர் போர்க்களப் பகுதியில் இருந்தும் விலகினர்.

அராலிச் சம்பவத்திற்கு பின்னர் தமது கடமைகளை விட்டுச் சென்ற இராணுவத்தினர் மீண்டும் வருவார்கள் என்ற நம்பிக்கை அதிகாரிகளிடம் இருப்பதாக நம்பப்படுகிறது.

அரசியல் வாதிகளும், இராணுவ பொறுப்பாளர்களும்சரியான முறையில் போர் புரியும் இராணுவத்திற்கு நிலைமையை தெளிவாக்கவில்லையென்ற நிலைப்பாடு தற்பொழுது உருவாகியுள்ளது.

இவற்றினைச் செய்வதற்குப் பதிலாக அரசியல் வாதிகளும், இராணுவ அதிகாரிகளும் தங்களை உயர்த்திக் கொள்ளும் மலிவான வழிவகைகளை கடைப்பிடிக்க முயன்றுள்ளனர்.

அடிக்கடி இவர்கள் யுத்த முனைகளுக்கு செல்லும் விவகாரங்கள் அரசாங்கக் கட்டுப்பாட்டில் உள்ள ரூபவாஹினி மூலம் விளம்பரப்படுத்தப்படுகின்றது. இதனால் புலிகளை தோற்கடிப்பதற்கு இராணுவ ரீதியாக முடியாது என்பதை எடுத்துக் காட்டுகிறது.

(தொடரும்)

---

### மாவீரர் வாரம்

## சிறப்பாக அனுஷ்டிக்க முன் ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் எழுச்சி வாரமும், மாவீரர் வாரமும் இம்முறை மிக சிறப்பாக அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதற்கான முன் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன

இவ்வாறு விடுதலைப்புலிகள் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி நேற்று கோண்டாவிலில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

நவம்பர் மாதம் 15ம் திகதி முதல் 20-ம் திகதி வரை மாவீரர் எழுச்சிவாரமாக அனுஷ்டிக்கப்படும் இந்த எழுச்சி வாரத்துக்கான அனைத்து ஏற்பாடுகளையும் விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு மேற்கொள்ளவுள்ளது.

எழுச்சிவாரத்தில் மக்கள் சிரமதானப்பணிகளில் ஈடுபடுவதுடன், வீதிகளை துப்பரவு செய்தல் அலங்காரப்பந்தல்கள் அமைத்தல் முக்கிய சந்திகளில் மாவீரர்களை நினைவு கூரும் வளைவுகளை அமைப்பதிலும், ஈடுபடுவார்கள்.

வட்டவை ரீதியில் நடைபெறும் இவ்வேலைகள் அனைத்திலும் சனசமூக நிலையங்கள், பொதுஸ்தாபனங்களும் கூடுதலாகப் பங்குபற்றவுள்ளன.

நவம்பர் மாதம் 15-ம் திகதி தென்மராட்சி கோட்டத்திலும், 16ம் திகதி வடமராட்சி கோட்டத்திலும் 17ம் திகதி யாழ். தீவகக் கோட்டங்களிலும்18ம்திகதி பண்டத்தரிப்பிலும் 19ம் திகதி யாழ். பல்கலைக்கழகத்திலும், 20ம் திகதி மருதனமடத்திலும், 21ம் திகதி யாழ்: தொழில் நுட்பக் கல்லூரியிலும் கூட்டங்கள் நடைபெறும்.

நவம்பர் மாதம் 21ம் திகதி முதல் 27ம் திகதிவரை மாவீரர் வாரமாக அனுஷ்டிக்கப்படும்.

மட்டக்களப்பு. அம்பாறை, திருமலை ஆகிய மாவட்டங்களின் மாவீரர்களின் படங்களும் இந்தி வைத்து அனுஷ்டிக்கப்படுவதுடன் இறுதி நாளான 27ம் திகதி மாவீரர்களின் பெற்றோர்களும் கௌரவிக்கப்படுவார்கள் என்று திரு. இளம்பரிதி மேலும் தெரிவித்தார். (வி)

---

அம்பாறையில்

## 152 பேர் கைது

(கொழும்பு)

அம்பாறை பகுதியில் சின்ன தோட்டம், அக்கரைப்பற்று ஆகிய இடங்களில் தேடுதல் மேற்கொண்ட ஸ்ரீ லங்கா அதிரடிப்படையினர் 152 பேரை கைது செய்துள்ளனர்.

இவர்களில் 108 பேர் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர். (க)

---

## மா விலை குறைந்தது

(யாழ்ப்பாணம்)

கோதுமை மாவின் விலை இன்றிலிருந்து 60 சதத்தால் குறைக்கப் பட்டுள்ளது

இதுவரை ஒரு கிலோ 13 ரூபா 60 சதமாக விற்பனை செய்யப்பட்ட மா இன்று முதல் கிலோ 13 ரூபாவாக விற்பனை செய்யப்படும். இதற்கான உத்தரவுகளை யாழ். குடாநாட்டின் சகல ப. நோ கூ. சங்கங்களுக்கும் யாழ் செயலக செய்திதிட்டப்பணிப் பாளர் திரு. செ.பத்மநாதன் அனுப்பி வைத்துள்ளார். (161)

---

## அத்த வழக்கு தள்ளுபடி

[கொழும்பு]

'அத்த' பத்திரிகை மீது அரசு தொடர்ந்த முக்கியமான வழக்கை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது

அரசு ஆதரவில் இயங்கி வரும் கண்காணிப்பாளர்களால் கொலைசெய்யப்பட்டவர்களின் பெயர்பட்டியலை அத்த பத்திரிகை வெளியிட்டதை எதிர்த்து அத்த மீது அரசு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது.

---

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் தினவிழா இன்று 11ம் திகதி புதன் கிழமை பி.ப 1-30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் பல்கலைக்கழக ஊழியர் சங்க தலைவர் திரு. நீ. இரவீந்திரதாசன் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக துணைவேந்தர் பேராசிரியர் அ துரைராசவும் சிறப்பு விருந்தினராக பதிவாளர் திரு. க பரமேஸ்வரனும் கலந்து கொள்வார்.

★

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இன்று 11ம் திகதி ''ஒளிவிழா'' நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை நெறிப்படுத்திய 'மூவிராசாக்கள்' என்னும் நாட்டுக்கூத்து இடம்பெறவுள்ளது: காரை நகரில் ஆடப்படும் ஆட்ட மரபுடைய இக் கூத்து தனித்துவம் கொண்டதாகும்.

---


## புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் ஆங்கிரச வருடம் ஐப்பசி மாதம் 26ம் நாள் (11-11-1992 புதன்கிழமை (இன்று) காலை 8-00 மணி முதல் 11-00 மணி வரையுள்ள சுபவேளையில் இல. 04, பருத்தித்துறை வீதியில்

D. சேனுதிராஜா M. H. D. I.
கண்பரிசோதித்துக் கண்ணாடி
கொடுப்பவரும் பல் கட்டுபவரும்

மேற்படி வியாபார நிறுவனத்தை ஆரம்பிக்க உள்ளதால் அத்தருணம் எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவரையும் சமுகம் தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கிளை:
146, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

இப்படிக்கு
D. சேனுதிராஜா
ஸ்தாபனத்தார்
(சி- 6967)



சைவ சித்தாந்த ஆய்வுவட்டம்
SAIVA SIDDHANTA STUDY CIRCLE

## கருத்தரங்கு

"அருள் பற்றி 3நோக்கு"

வழங்குவோர்
கலாநிதி வண. I. ஹென்றிவிக்டர் அடிகள்
கலாநிதி வண. பிதா டோமினிக் A யோசப் அடிகள்
பண்டிதர் சோ. தியாகராசாபிள்ளை

காலம்: 11-11-1992 (புதன்) மாலை 3-30 மணி
இடம்: திருமறைக் கலாமன்ற அரங்கு

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

வெ. யூ. கொன்ஸ்ரன்ரைன்
பொதுச்செயலாளர்

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
(ஏ-2581)

## ★ தீவிரவாதத்தை அடக்க இலங்கை இராணுவத்தில்

# 1,25,000 பேரைச் சேர்க்கவேண்டும்

## லலித் அத்துலத்முதலி கூறுகிறார்

(கொழும்பு)

"இலங்கையில் ஏற்பட்டுள்ள தீவிரவாதத்தை அடக்குவதற்கு இராணுவத்துக்கு ஒரு லட்சத்து 25 ஆயிரம் இராணுவத்தினரை சேர்க்க வேண்டுமென்று நான் அன்றே கூறினேன். ஆனால் இலங்கை இராணுவத்தின் தற்போதைய பலம் 77,500 மட்டுமே. இவ்வாறு முன்னாள் அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி கூறியுள்ளார்.

யாழ். குடாநாட்டில் இராணுவ நடவடிக்கைகளை குறைத்து மேற்கொள்வதற்கு 25ஆயிரம் இராணுவம் தேவை. இதேநேரத்தில் இனப்பிரச்னையை இராணுவரீதியாக தீர்ப்பதற்கோ அல்லது அரசியல் ரீதியில் தீர்ப்பதற்கோ தற்போதைய அரசிடம் எந்த ஒரு திட்டமும் இல்லை, என்று திரு அத்துலத்முதலி மேலும் கூறியுள்ளார். (வி)

### கப்பல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'கன்டுலா' கப்பல் கிழக்குக் கடலில் மூழ்கியதையடுத்து புதிய கப்பலை கொள்வனவு செய்ய கடற்படையினர் விரைவில் சீனா செல்லவுள்ளனர்.

இதேவேளை கடலில் மூழ்கிய 'கன்டுலா' கப்பலை மீட்கும் முயற்சியும் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (சி)

### ஹமில்டனின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போது பிரதமர் மறுத்துவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில வாரங்களாக தணிந்த நிலையிலிருந்த முறுகல் நிலை மீண்டும் படைத்தளபதிகளுக்கும் கூட்டுப்படைத் தலைமையகம், பாதுகாப்பு அமைச்சகங்களுக்கிடையில் எழுந்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

டிவற்றிலைக்கேணி படை முகாம் தொடர்பாக எழுந்த பெரும் சர்ச்சையில் இராணுவ தளபதி முன்னர் ராஜினாமாச் செய்யும் நிலை தோன்றிய பின்பே அதிகாரிகள் கூட்டுப்படைத் தலைமையகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. தற்போதும் இச்சர்ச்சை தொடர்வதால் படை நடவடிக்கையிலும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### வடக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதன் ஒரு கட்டமாக கிழக்கின் பல பகுதியிலுமிருந்து இராணுவத்தினர் படிப்படியாக வாபஸ் பெறப்பட்டு வடக்கே அனுப்பப்பட்டு வருகின்றனர்.

வடக்கில் இராணுவத்தினரை முழுமையாக ஈடுபடுத்தவே இத்திட்டம் எனவும் 'ஐலண்ட்' தெரிவித்துள்ளது. (சி)

### யுத்தம் விரைவில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரூபா செலவாகுவதால் இதனை எப்படியாவது தீர்க்க வேண்டுமென வற்புறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை அரசுக்கும் புலிகளுக்குமிடையில் பேச்சு வார்த்தை ஒன்று ஏற்படுவதை குழப்பாதிருக்கும் பொருட்டு அரசியல் வட்டாரங்கள் இராணுவ தாக்குதலை தீவிரப் படுத்துமாறு கோருவதை கைவிட்டுள்ளதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்துள்ளன. (சி)

### சிசு மரணம்

(யாழ்ப்பாணம்)

நேற்று ஏழுமாதச்சிசு ஒன்று யாழ்.போதனா வைத்தியசாலையில் வயிறுரோட்ட நோய்க்குப் பலியானது. (159)

### மன்னாரில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிராமங்களைப் பாதுகாப்பதற்கென அரசினால் அமைக்கப்பட்டுள்ள ஊர்காவற்படை பாதுகாப்புகுழு கண்காணிப்பு குழுக்களுக்கு போதிய பயிற்சி இல்லையெனக் கூறப்படுகிறது.

அண்மையில் மன்னாரில் மட்டும் 120 ஊர்காவற்படையினர், ஆயுதங்களைத் தமது அதிகாரியிடம் ஒப்படைத்து விட்டுச் சென்றுவிட்டார்கள்.

இதேபோன்று வேறு பகுதிகளிலும் ஊர்காவற்படையினர் விலகிச் செல்லும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

### தமிழ் இயக்கங்களின்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

களில் வைக்கப்பட்டுள்ள தமிழ் இயக்கங்களும் அடுத்த சில வாரங்களில் இலங்கைக்கு வரவுள்ளதாகவும் இங்கு அவர்கள் இப்படையில் சேரவுள்ளதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த சிறப்புப் படையை அமைப்பதற்கு இந்தியாவும் பெரும் உதவிகளைச் செய்துள்ளதாக பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

இந்த சிறப்புப் படையணியின் தலைவர் 'காளிதாஸ்' முன்னாள் ஈ.என்.டி.எல்.எவ். எம்.பி. சிறினிவாசனின் மெய்ப்பாதுகாவலர் என்றும் இவர் மட்டக்களப்ப கோட்டைக் கல்லாறை சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### அரசுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புறக்கோட்டையில் ஆரம்பமாகும் இந்த மனித சங்கிலி போராட்டத்தில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு எதிர்க்கட்சிகள் பிரசுரங்கள் விநியோகித்து வருகின்றன.

### ஆண்டு - 6

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பெற்ற புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் எதிர்பார்த்ததற்கு முன்பாகவே வெளிவரவுள்ளதாக அறியப்படுகிறது.

அத்துடன் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் அனுமதிப் பரீட்சை விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இதனால் உரிய காலத்தில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர் எண்ணிக்கையைச் சம்பந்தப்பட்டோர் அனுப்பி வைக்க முடியாதுள்ளது.

மேற்கூறப்பட்ட காரணங்களுக்காகவே இப்பரீட்சை பிற்போடப்பட்டுள்ளதாகவும் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

ஆண்டு 6 அனுமதிப் பரீட்சை இம்மாதம் 14, 16ம் திகதிகளில் நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. (159)

### மகனைக் காப்பாற்ற

1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் இடம் பெற்றது.

இச்சம்பவத்தில் இளம் தாயான திருமதி ஸ்ரீகாந்தன் புனிதராணி (27 வயது) அவரது மகன் சுகந்தராஜ் (6 வயது) என்பவர்களே மரணமானவர்களாவர்.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது;

வீட்டில் உள்ள கிணற்றுக்குள் தனது மகன் சுகந்தராஜ் விழுந்ததையடுத்து அவரை மீட்பதற்காக அவரது தாயாரான புனிதராணி கிணற்றுக்குள் இறங்கிய போது அவரது மகனைப் போலவே அவரும் நீருக்குள் மூழ்கி விட்டார்.

சிறிது நேரத்துக்கு பின்னர் அயலவர்களுக்கு விஷயம் தெரியவந்தபோது தாயையும் மகனையும் கிணற்றுக்குள் இருந்து மீட்டு மந்திகை அரசினர் வைத்திய சாலையில் சேர்ப்பித்தனர். அங்கு இருவரும் மரணமானதாக தெரியவந்தது.

இவ்விருவரது மரணம் தொடர்பாக பருத்தித்துறை காவல் துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் மரணவிசாரணைகளுக்கான ஏற்பாடுகளை செய்துள்ளனர். (61 - 52)

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளிடையே, கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் 17 வயதுப் பிரிவு உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் இன்று யாழ் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் யாழ். சென். ஹென்றிஸ் கல்லூரியும், யாழ். சென். சாள்ஸ் மகாவித்தியாலயமும் மோதும். 3-வது இடத்துக்கான போட்டியில் ஸ்கந்தவரோதயா கல்லூரியும் விக்னேஸ்வரா கல்லூரியும் மோதும்.

### படை முகாம்களுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சருடன் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சின் செயலாளர் எயர் மார்ஷல் வோல்டர்பெர்ணாண்டோ, வடபகுதி தளபதி பிரிகேடியர் ஜேகான் தலுவத்தை உட்பட பல இராணுவ சிரேஷ்ட அதிகாரிகளும் அவருடன் சென்றனர். (வி)

### படை அதிகாரிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வீச்சு விமானங்களையே விமானப் படைக்காக இவர்கள் கொள்முதல் செய்யவுள்ளதாக விமானப் படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது நவீன ராடர், கம்பியூட்டர் வசதிகளை கொண்ட 'லேசரி'ரக குண்டுவீச்சு விமானம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### மணலாறில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முக்குத் தப்பி ஓடினார்கள்.

இச்சம்பவத்தில் 7 படையினர் கொல்லப்பட்டதைச் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரம் ஊர்ஜிதம் செய்தது

ஜி 3, ஏ3 ரகத் துப்பாக்கிகள்-6, இதற்குரிய ரவைக்கூடுகள் 34, ரி 56 ரகத் துப்பாக்கி-03, தொலைத் தொடர்புச்சாதனம்-1, ஏ கே ரவைக் கூடுகள்-10, நேட்டோ ரவைகள்-836, நடுத்தர ரவைகள்-574, கறுப்பு ஜே ஆர் கைக்குண்டு-12, ஏ கே ரவைக்கூடு தாங்கிகள்-10, இராணுவப் பைகள்-2, இராணுவப் பட்டிகள்-4, தொப்பி-1, தண்ணீர் தாங்கி-1 ஆகிய ஆயுதங்கள் இச்சம்பவத்தில் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ரி-க)

## மரண அறிவித்தல்

### திரு. தங்கராஜா சிவலிங்கம்

(முகாமையாளர், மக்கள் வங்கி, பருத்தித்துறை)

திரு. தங்கராஜா சிவலிங்கம் (முகாமையாளர், மக்கள் வங்கி, பருத்தித்துறை) அவர்கள் 10-11-92 செவ்வாய்க்கிழமை அன்று காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற தா. தங்கராஜா, பாலரத்தினம் ஆகியோரின் அன்பு மகனும், மதியாபரணத்தின் அன்புக் கணவரும், சிவறஞ்சினி, மனோரஞ்சன், சிவகலா, மதிவண்ணன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சேதுநாதபிள்ளை, சிவனடியார் (இளைப்பாறிய முகாமையாளர், விற்பனைத் திணைக்களம்), இந்திராணி, தாமோதரம்பிள்ளை (இளைப்பாறிய முகாமையாளர், விற்பனைத் திணைக்களம்) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற பரமேஸ்வரி, திலகவதி, இராமச்சந்திரன் (கணக்காளர், கச்சேரி, வவுனியா), சாரதா ஆகியோரின் மைத்துனரும், விநாயகமூர்த்தி இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர்) அவர்களின் சகலனும் செல்வராஜா (பொறியியலாளர்) அவர்களின மாமனாரும், கணபதிப்பிள்ளை, புஷ்பராணி, செல்வானந்தம், உதயகுமார், சிவகுமார், சின்னராஜன், கேதீஸ்வரன், ஜெகதீஸ்வரன், பத்மாசனி, சரவணபவதீஸ்வரன், சிவரூபி, சிவராணி, சிவகுமார், சிவரூபன் ஆகியோரின் சிறிய தந்தையுமாவர். அன்னாரது ஈமைக்கிரியைகள் இன்று 11-11-92 புதன்கிழமை காலை 10-30 மணியளவில் குடும்ப மயானத்தில் நடைபெறுமென்பதை அறியத் தருகிறோம். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சி. மதியாபரணம்
(மனைவி)

"சிவமதி"
துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

(சி-6968)

## வாணிபம், தொழில் முயற்சி பதிவு திகதிகள்

(யாழ்ப்பாணம்

வாணிபம் மற்றும் தொழில் முயற்சிகளை பதிவு செய்வதற்கான கால அட்டவணையை உதவி அரச அதிபர் பிரிவு ரீதியாக தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறை வெளியிட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு:

| வாணிபம்/தொழில் தன்மை | கரவெட்டி உ. அ. அ. பிரிவு | வடமராட்சி கிழக்கு உ. அ. அ. பிரிவு | பச்சிலைப்பள்ளி உ. அ.அ.பிரிவு |
|---|---|---|---|
| பவுண். பொன், வெள்ளி நகை வாணிபம், நகை உற்பத்தி | 12-11-92 முதல் | 19-11-92 முதல் | 19-11-92 முதல் |
| தொழில், அடவு கடை | 15-11-92 வரை | 21-11-92 வரை | 21-11-92 வரை |
| பலசரக்கு வாணிபம் | ,, | ,, | ,, |
| புடவை வாணிபம் | ,, | ,, | ,, |
| கட்டிடப்பொருள்/ மின்சார உபகரணங்கள் மோட்டார் | 16-11-92 முதல் | ,, | ,, |
| உதிரிப்பாக வாணிபம் | 18-11-92 முதல் | ,, | ,, |
| விடுதிகள்/ மதுபானச்சாலை தேனீர்சாலை | ,, | ,, | ,, |
| தொழில் நிறுவனங்கள் | ,, | ,, | ,, |
| உயர் தொழில்/ கண்ணியத்தொழில் | ,, | ,, | ,, |
| ஏனையவைகள் | ,, | ,, | ,, |

### விண்ணப்பப்படிவங்கள் வழங்கும் இடங்கள் வருமாறு

1. கரவெட்டி உ. அ. அ. பிரிவு வடமராட்சி வருவாய்பகுதி செயலகம்
2. வடமராட்சி கிழக்கு உ. அ. அ. பிரிவு வடமராட்சி வருவாய்ப்பகுதி செயலகம்
3. பச்சிலைப்பள்ளி உ. அ. அ. பிரிவு தென்மராட்சி வருவாய்ப்பகுதி செயலகம்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு நவம்பர் மாதம் 11ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registerrd as a News Paper at the General Post office, Sri Lanka under Licence Number B/I0336/8